**அனுப்புநர்**

முனைவர். க. ராமராஜ்., M.A., M.Ed., M.Phil., Ph.D.,
முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பாடாலூர், பெரம்பலூர் மாவட்டம்

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
முதன்மைக் கல்வி அலுவலகங்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண். 89/அ5/2026 நாள்.17.02.2026

பொருள்: பள்ளிக் கல்வி 2023-2024 ஆம் கல்வியாண்டு அறிவிப்பு எண்.11 ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு தற்போது பணி நியமனம் வழங்கப்பட்ட தமிழ்ப் பாட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி - 23.02.2026 முதல் 25.02.2026 வரை மூன்று நாட்கள் சேலத்தில் நடைபெறுதல் - ஆசிரியர்களை பணிவிடுவிப்பு செய்யக் கோருதல் சார்ந்து.

பார்வை: 1. பள்ளிக் கல்வித்துறை, மானியக் கோரிக்கை எண்.43. அறிவிப்பு எண்.11
2. சென்னை-6. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.44750/எ.ப்3/2024 நாள் .02.2026.

-----------------

பார்வையில் காணும் சென்னை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைக்கிணங்க 2025-2026 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு தற்போது பணிநியமனம் வழங்கப்பட்டுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணியில் சேர்ந்த பின்னர் கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை நிருவாகப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு (Including 2% Non Teaching) புகுநிலைப் பயிற்சி அண்ணா நூற்றாண்டு விழா நூலகக் கட்டடம் , கோட்டூர்புரம் சென்னையில் **18.02.2026** அன்று புதன்கிழமை காலை **9.00** மணியளவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களது முன்னிலையில் அளிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மண்டல அளவில் பாடவாரியாக தனித்தனியாகப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தமிழ்ப் பாட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி கீழ்க்காணும் அட்டவணைப்படி நடைபெறவுள்ளது. எனவே அனைத்து மாவட்டங்களிலும் புதியதாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள தமிழ் பாட ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலினை கீழ்க்காணும் **Google Sheet**-இல் **18.02.2026**-க்குள் பூர்த்தி செய்வதுடன். அவர்களை உரிய நேரத்தில் பயிற்சியில் கலந்துகொள்ளும் பொருட்டு பணியிலிருந்து விடுவிக்க சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளலாகிறது.

| வ.எண் | பாடம் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | பயிற்சி நடைபெறும் நாள் | பயிற்சி நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் | 189 | 23.02.2025 முதல் 25.02.2026 வரை | ஏற்காடு-TIO Hotel& Golden Nest சேலம் மாவட்டம் |

**இணைப்பு:**
https://docs.google.com/spreadsheets/d/19ZixZbe9vgnCUGxaaJ4tRJbr-hzhupSkDaEvID5akAM/edit?usp=gmail

க. ராமராஜ் 17.02.2026
முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்
பாடாலூர். பெரம்பலூர்

நகல்:

1. சென்னை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு தகவலுக்காக, கனிவுடன் அனுப்பலாகிறது.